# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, சென்னை –600 032.
தொலைபேசி: 044–22201337/நிகரி எண்.22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ).
*************

முறையீட்டு மனு எண்: 1301/2016/ந

ஆணை எண்: 113/2017

நாள்: 12/05/2017

திரு. M. ஜெயராமன்,
63/16A, காமாட்சியம்மன் கோவில் தெரு,
துறையூர், திருச்சி மாவட்டம் - 621 010. — முறையீட்டு மனுதாரர்

முன்னாள் நகராட்சி தலைவர்/நகராட்சி ஆணையர்,
துறையூர் நகராட்சி,
திருச்சி மாவட்டம் - 621 010
மற்றும் பிறர் — எதிர் மனுதாரர்கள்

## ஆணை

முறையீட்டு மனுதாரரது 08.12.2016 நாளிட்ட முறையீட்டு மனு 16.12.2016 அன்று இம்முறைமன்ற நடுவத்திற்கு வரப்பெற்று எண்.1301/16 ஆக பதிவு செய்யப்பட்டது.

மேற்படி முறையீட்டு மனுவில் துறையூர் நகராட்சியின் முன்னாள் நகர் மன்றத் தலைவர் மற்றும் 24 முன்னாள் நகர் மன்ற உறுப்பினர்கள் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்திற்கு முரணாக நகராட்சி ஆணையர் மற்றம் பிற அலுவலர்களின் துணையுடன் பேருந்து நிலையத்திலுள்ள 25 நகராட்சி கடைகளை போலியான ஏலம் நடத்தி தலா ஒரு கடையினை எடுத்துள்ளனர் என புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி கடைகள் கட்டப்படும்போது முரணாக ஏலமிடப்பட்டு தங்கள் சுய பயன்பாட்டிற்காக கிட்டத்தட்ட ஒரு கோடி அளவில் நகராட்சிக்கு இழப்பு ஏற்படுத்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அனைத்து முன்னாள் நகர்மன்ற உறுப்பினர்களையும், முன்னாள் நகர்மன்றத் தலைவரையும் வரவிருக்கின்ற உள்ளாட்சித் தேர்தலில் போட்டியிட தகுதி நீக்கம் செய்து உத்தரவிடுமாறும், தங்களது அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்தது மற்றும் ஊழல், நிர்வாக சீர்கேடு குறித்து ஆணையிடுமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

இப்பொருள் குறித்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு துறையூர் நகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணை எண்.1301/2016/ந நாள்:21.12.2016ன்படி ஆணையிடப்பட்டது. மேலும், அழைப்பாணை எண்.1301/2016/ந நாள்:02.01.2017ன்படி 16.02.2017 அன்று முறைமன்ற நடுவ விசாரணைக்கு நேரில் ஆஜராகி விளக்கமளிக்குமாறு மனுதாரர் கேட்டுக் கொள்ளப்பட்டார்.

இதனிடையே மனுதாரர் தனது 19.01.2017 நாளிட்ட மனுவில், மேற்படி ஊழல் குற்றச்சாட்டிற்குட்பட்ட திரு.தாண்டவமூர்த்தி, நகராட்சி பொறியாளர், திருமதி மீனா, மேலாளர் மற்றும் நகராட்சி ஆணையர் ஆகியோர் பணி மாறுதலில் சென்று விட்டதாகவும், சம்பந்தப்பட்ட உதவியாளர் திரு. S. மணிமுத்து என்பவர் மட்டும் துறையூரில், பணி தொடர்ந்து வருவதால் விசாரணைக்கு இடையூறான செயல்பாடுகள் ஏற்படலாமென்பதால் அவரையும் வேறு நகராட்சிக்கு மாறுதல் செய்ய தக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார். இம்மனுவின் நகலும் இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணை அ.ச.எண்.1301/16/ந நாள்: 01.02.17ன் மூலம் துறையூர் நகராட்சி ஆணையருக்கு அனுப்பி வைக்கப்பட்டு, கோரப்பட்ட பதிலறிக்கையினை 15.02.17க்குள் சமர்ப்பித்திட வேண்டுமென வலியுறுத்தி ஆணையிடப்பட்டது.

நகராட்சி ஆணையரது கடிதம் ந.க.எண்.5022/2016/அ1 நாள்:10.02.2017ல் இம்முறைமன்ற நடுவ 21.12.2016 நாளிட்ட விளக்கம் கோரிய அறிவிப்பாணை சம்பந்தப்பட்டவர்களுக்கு சார்வு செய்யப்பட்டதாகத் தெரிவித்து சார்வு விபரங்களுடன் வரப்பெற்றது.

மேலும், 10.02.2017 நாளிட்ட பிறிதொரு விளக்க அறிக்கையும் நகராட்சி ஆணையரிடமிருந்து 13.02.2017 அன்று இம்முறைமன்ற நடுவத்திற்கு வரப்பெற்றது. அதில் கீழ்க்கண்டவாறான விவரங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன:-

"-துறையூர் நகராட்சி பேருந்து நிலையத்தின் கிழக்குபுறம் உள்ள பழைய நகராட்சி அலுவலகத்தில் கட்டப்பட்டு வரும் 25 கடைகளை அரசாணை (நிலை) எண்.92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்:03.07.2007 மற்றும் அரசாணை (2D) எண்.222 நகராட்சி

நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்:26.11.2007ன்படி முன் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரி மாவட்ட ஆட்சித் தலைவர், அலுவலக செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருச்சி அவர்களுக்கு 23.9.2015 அனுப்பி வைக்கப்பட்டு, 24.09.2015ம் தேதிய தினபூமி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டுள்ளது. அதன்படி 15.10.2015ல் நடைபெற்ற முன் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ள 14.10.15ஆம் நாள் தலா கடை ஒன்றுக்கு 2 நபர்கள் வீதம் 25 கடைகளுக்கு உரிய வைப்புத் தொகைக்கான வங்கி வரைவுகள் பெறப்பட்டது. பொதுப் பணித்துறையினால் அங்கீகரிக்கப்பட்ட வாடகை மதிப்பீட்டின் அடிப்படையில் மாத வாடகை நிர்ணயிக்கப்பட்டு அரசாங்க மதிப்பிற்கு குறைவில்லாமல் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது. இதில் முறைகேடோ, நிதியிழப்போ ஏதுமில்லை. மேற்படி கடைகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் ஒப்படைத்து பொது ஏலத்தில் ஒருவரும் கலந்து கொள்ளவில்லை. அதன் அடிப்படையில் வரப்பெற்ற உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகை கோரியவர்களின் விபரம் நகர்மன்றத்திற்கு பொருள் வைக்கப்பட்டு நகர்மன்ற தீர்மான எண்.280, நாள்:23.10.2015-ல் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. எனவே, நகராட்சி பொறியாளரின் 29.08.2016ம் தேதிய குறிப்பின்படி கட்டி முடிக்கப்பட்ட 9 கடைகளுக்கு (16 முதல் 25 முடிய உள்ள) 30.8.2016ம் நாள் குத்தகை உரிமம் வழங்கப்பட்டு கடைகள் ஒப்படைக்கப்பட்டன. மேற்கண்ட 25 கடைகளுக்கு முன் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரி கடைகளை ஒப்படைப்பு செய்ததை ஆட்சேபித்த திரு.எஸ்.முத்துக்குமார் என்பவரால் சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் வழக்கு எண்.WP (MD) 18436/2016 நாள்:30.9.2016ல் தொடரப்பட்டு தடையாணை பெறப்பட்டது. தடையாணை பெறப்பட்டுள்ளதால் மீதம் உள்ள 18 கடைகளுக்கு நாளது தேதி வரை உரிமம் வழங்கப்படவில்லை.

மேற்படி வழக்கிற்கு பதிலுரை (counter) தயார் செய்து தாக்கல் செய்யப்பட்டு வழக்கு விசாரணை 25.11.16 ஆம் நாள் வரப்பெற்று 28.11.16ல் வாய்தா அறிவிக்கப்பட்டு மறு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு தேதி குறிப்பிடாமல் ஒத்திவைக்கப்பட்டது. மேற்படி வழக்கானது 27.01.2017ம் நாள் விசாரணைக்கு வரப்பெற்று தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது."

அரசாணை (2D) எண்:222 நகராட்சி நிர்வாகம் (மற்றும்) குடிநீர் வழங்கல் துறை நாள்: 26.11.2007ன்படி நகர உள்ளாட்சி அமைப்புகள் வருமானம் தரத்தக்க இனங்களுக்கான பணிகளை மேற்கொள்வதற்கு முன் அவற்றில் 75% இனங்களை கண்டிப்பாக முன் ஏலம் விடப்பட்ட பின்பே கட்டுமானப் பணிகள் தொடங்க வேண்டுமென அரசால் ஆணையிடப்பட்டுள்ளது. எனவே,

அரசாணையின்படி நகராட்சி கடைகளை கட்டுமானப் பணிகள் முடிவடைவதற்கு முன்பாக ஏலம்விட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட நீதி பேராணை வழக்கு எண்.18436/2016 வழக்கின் மனுதாரர் திரு. முத்துகுமார் என்பவர் வழக்கை திரும்பப் பெற்றதால் நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

15.02.2017 அன்று விசாரணைக்கு ஆஜரான முறையீட்டு மனுதாரர் புகாரில் குறிப்பிட்ட குற்றச்சாட்டுகளையே மீள வலியுறுத்தி கடை வாடகையினை மிக குறைவாக நிர்ணயித்து சுமார் 2 கோடி ரூபாய் அளவிற்கு நகராட்சிக்கு நட்டம் ஏற்படுத்திவிட்டனரென புகார் தெரிவித்து தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்தார். இதனிடையே இம்முறைமன்ற நடுவ அழைப்பாணை (அ)மா.எண்.1301/16ந நாள்:15.02.17ல் 23.03.2017 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு துறையூர் நகராட்சி ஆணையருக்கு ஆணையிடப்பட்டது. மேலும், இம்முறைமன்ற நடுவ விளக்கம் கோரும் அறிவிப்பாணைகள் சம்பந்தப்பட்ட எதிர்மனுதாரர்களுக்கு சார்வு செய்யப்படாமல் ஏலதாரர்களுக்கு சார்வு செய்யப்பட்டுள்ளதை சுட்டிக்காட்டி அவற்றை உரியவர்களுக்கு முறையாக சார்வு செய்து விளக்கங்களைப் பெற்று அனுப்பி வைத்திடுமாறு 17.02.17 நாளிட்ட அறிவிப்பாணை மூலம் நகராட்சி ஆணையருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

துறையூர் நகராட்சி ஆணையரது விளக்க அறிக்கை ந.க.எண்.5022/2016/அ1 நாள்:22.02.2017ல், மேற்படி நகராட்சி கடைகள் கட்டுவதற்கான நிர்வாக அனுமதி, நகர் மன்ற தீர்மானம், ஒப்பந்தப்புள்ளி கோரிய விளம்பரம், வைப்புத் தொகைகள் பெறப்பட்ட விவரம், ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்ட விவரம், நகர் மன்ற ஒப்புதல் தீர்மானம், உரிமம் ஒப்படைக்கப்பட்ட கடைகள் விவரம், சொத்து மதிப்பு சான்றிதழில் வட்டாட்சியர் கையொப்பம், சார் பதிவாளர் அலுவலக வில்லங்க சான்றுகள் பெறப்பட்டது, நகர் மன்றத்தால் ஏல நடவடிக்கைகள் அங்கீகரிக்கப்பட்டு இறுதி செய்யப்பட்டது போன்ற விவரங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. மேலும், தொடர்புடைய அனைத்து ஆவண நகல்களும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மேலும், நகராட்சி ஆணையரது அறிக்கை ந.க.எண்.5022/2016/அ1 நாள்:10.03.2017 உடன் எதிர்மனுதாரர்களிடமிருந்து பெறப்பட்ட விளக்கங்கள்/பதிலறிக்கைகளும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி விளக்கங்களில் மனுதாரரது புகார்களை மறுத்துள்ளதோடு ஏலதாரர்கள்/குத்தகைதாரர்களுக்கும் தங்களுக்கும் தொடர்பேதுமில்லை என உறுதியளித்துள்ளனர்.

இந்நிலையில் மனுதாரரது 21.03.17 நாளைய மின்னஞ்சல் செய்தியில், தான் முறைமன்ற நடுவத்தில் புகார் அளித்ததால் மிரட்டப்படுவதாக குறிப்பிட்டார். அதனடிப்படையில் மனுதாரரது கோரிக்கை குறித்து தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு திருச்சி மாவட்ட காவல் கண்காணிப்பாளர், முசிறி துணை காவல் கண்காணிப்பாளர் மற்றும் துறையூர் காவல் ஆய்வாளர் ஆகியோர் இம்முறைமன்ற நடுவ கடித எண்.1301/16/ந நாள்:29.03.2017ன் மூலம் கேட்டுக்கொள்ளப்பட்டனர்.

இதனிடையே 23.03.2017 அன்று இம்முறைமன்ற நடுவ விசாரணைக்கு ஆஜரான துறையூர் நகராட்சி ஆணையர் திரு. அ. நாகேந்திரன் கீழ்க்கண்டவாறான விவரங்களை சமர்பித்தார்:

“2015ஆம் ஆண்டு நடந்த ஏலத்தில் நகராட்சியால் கட்டப்பட்ட 25 கடைகள் ஒப்பந்தப்புள்ளிகள் மூலம் ஏலம் விடப்பட்டன. 9 கடைகள் சம்பந்தப்பட்ட நபர்களுக்கு ஒப்படைக்கப்பட்டன. 25 கடைகளும் ஏலம் விடப்பட்டு இறுதி செய்யப்பட்டுவிட்டது. கடை எண். 1 முதல் 24 முடிய உள்ளவை 75 ச.அ. அளவு கடைகள் ஒப்பந்தப்புள்ளித் தொகை குறைந்தபட்சம் ரூ.1810/- முதல் அதிகபட்சம் ரூ.1,870/- வரையும் கடை எண்.25, 225 ச.அ. அளவு கொண்டது ரூ.6,700/- மாத வாடகைக்கும் விடப்பட்டுள்ளது.”

மேலும், நகராட்சியின் அசல் கோப்பு ந.க.எண்.5022/2015/அ1 இம்முறைமன்ற நடுவ ஆணைகளின்படி பரிசீலனைக்காக ஒப்படைக்கப்பட்டது.

முறையீட்டு மனுதாரரால் குற்றம்சாட்டப்பட்ட அலுவலர்களான திரு. தாண்டமூர்த்தி முன்னாள் நகராட்சி ஆணையர், (பொ) துறையூர் தற்போது நகராட்சி பொறியாளர் அரியலூர், திருமதி. மீனா, முன்னாள் துறையூர் நகராட்சி மேலாளர் (தற்போது அறந்தாங்கி நகராட்சி மேலாளர்), திரு.S. மாரிமுத்து உதவியாளர் துறையூர் நகராட்சி ஆகியோரை 10.05.2017 அன்று இம்முறைமன்ற நடுவ விசாரணைக்கு ஆஜராகுமாறு இம்முறைமன்ற நடுவ அழைப்பாணை அ.ப.எண்.1301/2016/ந நாள்:30.03.2017ன் மூலம் ஆணையிடப்பட்டது.

முறையீட்டு மனுதாரரது 03.04.2017 நாளிட்ட பிறிதொரு மனுவில், தான் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் கோரிய தகவலுக்கு திரு. முத்துகுமார் என்பவரால் தொடரப்பட்ட வழக்கு எண்.WP (MD) 18436/2016 நிலுவையில் உள்ளதாக உண்மைக்கு மாறான தகவல்களை வழங்கியுள்ளதாக தெரிவித்துள்ளார். இது குறித்து ஆவணங்களை கூர்ந்தாய்வு செய்யப்பட்டன.

மேற்குறிப்பிட்டவாறான தகவல் நகராட்சியின் 19.01.2017 நாளிட்ட கடிதத்தில் அளிக்கப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட நீதிமன்ற வழக்கில் 27.01.2017 அன்றுதான் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் மேற்படி நகராட்சியால் அளிக்கப்பட்ட தகவலில் முரண்பாடுகள் ஏதுமில்லை என்பது புலனாகிறது.

10.05.2017 அன்று நடைபெற்ற விசாரணைக்கு முன்னாள் துறையூர் நகராட்சி ஆணையர் (பொ) திரு. தாண்டவமூர்த்தி, முன்னாள் மேலாளர் திருமதி. மீனா மற்றும் உதவியாளர் திரு. S. மாரிமுத்து ஆகியோர் ஆஜராகி தங்களது வாக்குமூலங்களை சமர்ப்பித்துள்ளனர்.

நகராட்சி கடைகள் ஒப்பந்தப் புள்ளிகளின் அடிப்படையில், முறையான விளம்பரங்கள் மேற்கொள்ளப்பட்டு, அரசாணையின்படி முன் ஏலம் விடப்பட்டுள்ளதென்றும், முறைகேடு ஏதுமில்லை எனவும் உறுதி அளித்துள்ளனர். மேலும், நகர் மன்ற தீர்மானங்களின்படி அனுமதிக்கப்பட்டு, அங்கீகரிக்கப்பட்டதையும் குறிப்பிட்டுள்ளனர்.

துறையூர் நகராட்சியின் சம்பந்தப்பட்ட கோப்பு எண்.5022/2015/அ1 இம்முறைமன்ற நடுவத்தால் கூர்ந்தாய்வு செய்யப்பட்டது. அதன்படி கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:-

(i) மேற்படி நகராட்சி கடைகள் கட்டுதல் தொடர்பாக 07.08.2015 முதலே நடவடிக்கைகள் துவங்கப்பட்டுள்ளன.

(ii) நகராட்சி வருமானம் மற்றும் நிர்வாகம் நலன் கருதி கட்டிடம் கட்டப்படும் முன்பு முன்பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளி மூலம் வாடகைக்கு விட நிர்வாக அனுமதி வழங்கி நகர் மன்ற தீர்மானம் (எண்.175) 16.06.2015 லேயே இயற்றப்பட்டுள்ளது.

(iii) வைப்புத் தொகை, சொத்து மதிப்பு சான்று மற்றும் கூடுதல் வைப்புத் தொகை மற்றும் நிபந்தனைகள் குறித்து நகர்மன்றத்தால் தீர்மானம் (எண்.266) 22.09.2015ல் இயற்றப்பட்டுள்ளது.

(iv) முன் பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு 23.09.2005 அன்று தினசரி நாளிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

(v) ஒப்பந்தப்புள்ளிகள் 14.10.2015 அன்று பெறப்பட்டு 15.10.2015 அன்று இறுதி செய்யப்பட்டுள்ளது.

(vi) நகர் மன்றத்தால், தீர்மான எண்.280 நாள்:15.10.2015ன் படி ஏலம் உறுதி செய்யப்பட்டுள்ளது.

மனுதாரது கோரிக்கையில்/வாக்குமூலத்தில் குறிப்பிட்டது போன்று ஏலதாரர்கள் தேர்தெடுக்கப்பட்ட நகர் மன்ற உறுப்பினர்களின் இரத்த சம்பந்தமான உறவினர்கள் என்பதற்கான எவ்விதமான ஆதார சான்றுகளையோ அல்லது அவ்வாறானவர்கள் ஏலத்தில் கலந்து கொள்ள தடை உள்ளதற்கான ஆதார ஆவணங்களையோ சமர்ப்பிக்கவில்லை. மேலும், அவர்களை தேர்தலில் போட்டியிட தகுதி நீக்கம் செய்திட வேண்டுமென்ற மனுதாரது குறிப்பான கோரிக்கையினை ஏற்பதற்கு இம்முறைமன்ற அமைப்பின் சட்ட விதிகளில் வழிவகை இல்லை. அவ்வாறான ஆதாரங்களிருப்பின் தகுதி நீக்க கோரிக்கை குறித்து மாநிலத் தேர்தல் ஆணையத்திடமே முறையீடு செய்திட வேண்டும். மேலும், முறையீட்டில் உள்ள முறைகேடு என்பது நிரூபணமாகாத நிலையில் மனுதாரர் கோரியுள்ள பிற கோரிக்கைகளும் ஏற்பதற்கில்லை எனக் கருதி அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2017-ஆம் ஆண்டு மே திங்கள் 12-ஆம் நாளன்று கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

-//ஒப்பம்//-

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்

பெறுநர்

1. திரு. M. ஜெயராமன்,
   63/16A, காமாட்சியம்மன் கோவில் தெரு,
   துறையூர், திருச்சி மாவட்டம் - 621 010.

2. நகராட்சி ஆணையர்,
   துறையூர் நகராட்சி,
   திருச்சி மாவட்டம் - 621 010.

3. அனைத்து எதிர்மனுதாரர்கள்/நகராட்சி ஆணையர் மூலமாக

நகல்
நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்,
தஞ்சாவூர் மண்டலம்.